பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 11 புதன்கிழமை 28.02.2024 கதிர் 113

# பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள் இன்றும் நாளையும் பணி நிறுத்தம்

## யாழ்ப்பாணம், கொழும்பில் ஆர்ப்பாட்டங்களும் ஏற்பாடு

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் இன்றும் நாளையும் வேலைநிறுத்தம் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் இது தொடர்பில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இடம் பெறவுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் 20.02.2024 திகதியிடப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 28.02.2024 மற்றும் 29.02.2024 ஆகிய இரு தினங்களும் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

ஐக்கியமக்கள்சக்தியின்ஜனாதிபதி வேட்பாளர் சஜித், ஜேவிபியின் வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்க என்பது தெளிவாக இருந்தாலும் ஆளும் தரப்பின் வேட்பாளர் யார் என்பது இன்னும் முடிவாகவில்லை அல்லது தெளிவாகவில்லை. ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நடக்கும்என்றுரணில்விக்கிரமசிங்க திரும்பத் திரும்பக் கூறிவந்தாலும் அதில் தான் போட்டியிடுவாரா என்பதை அவர் தன் வாயால் இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் மீண்டும்மீண்டும்கூறிவருகின்றனர். ஆனால் சஜித் அணி ஆதரவு இன்றி ஐதேக ஊடாகப் போட்டியிட்டால் ரணிலால் வெல்ல முடியாது ☞ 2

## ஆளும் தரப்பு எம்.பி. திடீர் பதவி விலகல்

ஆளும் பொது ஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன திடீரென தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் அநுராதபுரம் ☞ 2

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணை எதிர்க்கட்சிகளின் இயலாமை

## சாடுகிறார் முன்னாள் எம்.பி ஆஷு மாரசிங்க

சபாநாயகர் மகிந்த யாப்பஅபேவர்த்தனவுக்கு எதிராகக்கொண்டுவரப்பட்டிருக்கும்நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்கட்சிகளின் இயலாமையின் வெளிப்பாடு என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நிகழ்நிலை காப்புச் சட்டத்தை அனுமதித்து சபாநாயகர் கைச்சாத்திட்டமைக்கு எதிராகவே தற்போது எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவரநடவடிக்கை எடுத்திருக்கின்றன.

குறித்த சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்போது உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியதிருத்தங்கள் உள்வாங்கப்படவில்லை எனத் தமிழ் தேசிய கூட்டமைப்பு ☞ 2

# சபாநாயகருக்கு எதிரான பிரேரணைக்கு சகல எதிர்க் கட்சிகளுமே ஆதரவு

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாபிரேரணைக்குச் சகல எதிர்க்கட்சிகளும் தமது ஆதரவை தெரிவித்துள்ளன. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினைமாற்றும்அதிகாரம் சட்டமா அதிபருக்கு கிடையாது என்பதை சபாநாயகர் தெரிந்து கொள்ளவேண்டும்என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியும், சபாநாயகரும் சட்ட விரோதமாகச் செயற்படுகின்றனர். எனவே தான் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவந்துள்ளோம். அதற்குச் சகல எதிர்க் கட்சிகளினதும் ஆதரவு கிடைத்துள்ளது. நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியதீர்ப்பினைசபாநாயகர் நடைமுறைப்படுத்தவில்லை. குறித்த சட்ட மூலத்திலுள்ள 57 சரத்துக்களில் 35 சரத்துக்கள் திருத்தப்படவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. ☞ 2

# தொழில் முயற்சியாளர்களுக்கு குறைந்த வட்டியில் தனிக் கடன்

## அறிமுகப்படுத்தத் தயாராகிறது ஆளும் தரப்பு

சிறியமற்றும்நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு தனியான கடன் திட்டத்தையும் அறிமுகப்படுத்தஉள்ளோம்.எமக்கு நிதியுதவி வழங்கும் உலக வங்கி மற்றும் ஆசியஅபிவிருத்திவங்கி போன்ற நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து இந்த குறைந்த வட்டியில் கடன் வழங்கும்முறையைஅறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடு ஒருநிதிக்கொள்கையைக்கொண்டிருக்க வேண்டும். மேலும் பொருளாதாரமும் வலுவாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு கணிசமான அதிகாரம் உள்ளது. கடந்த காலத்தில் ☞ 8

# நல்லூரில் ஒருவர் உயிரிழந்த விபத்து நடந்த தனியார் பேருந்தின் வழித்தட அனுமதி இடைநிறுத்தம்

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக வீதியில் பயணித்த தனியார்பேருந்திலிருந்து ஒருவர் தவறி வீழ்ந்து இறந்த சம்பவத்துடன் தொடர்புடையபேருந்தின் வழிதட அனுமதி தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 23 இடம்பெற்ற இந்த விபத்தில் முல்லைத்தீவைச்சேர்ந்தவரான அழகராசா நிதர்சன் உயிரிழந்தார். விபத்துத் தொடர்பில் முழு விசாரணையை மேற்கொண்டு உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பயணிகள்போக்குவரத்து அதிகாரசபையின் வட பிராந்தியத்தலைவருக்கு, வடக்குமாகாணகௌரவ ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

அதற்கமைய, விபத்துடன்தொடர்புடைய பஸ்சின் வழிதட அனுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ☞ 2

# பொலிஸ் மா அதிபர் நியமனத்திற்கு அரசமைப்புப் பேரவையும் அனுமதி

## நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தது ஆளும் தப்பு

தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிப்பதற்கு சபாநாயகர் தலைமையிலான அரசமைப்பு பேரவையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் அனுமதி வழங்கியுள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுவதை தடுப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த ஏழு மனுக்கள் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின்புள்ளேஇதனைக் கூறினார்.

தேசபந்து தென்னகோன்பதில்பொலிஸ்மா அதிபராக செயற்படுவதையும்அவர்பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுவ ☞ 2

# காஸாவில் குழந்தைகளுக்கு உதவ ரணில் யோசனையில் புதிய நிதியம்

காஸா எல்லை பகுதிகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு நிதியத்தை நிறுவுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

அதன்படி இப்தார் நிகழ்வுகளுக்காக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களினால் ஒதுக்கப்படும் தொகையை இந்த நிதியத்திற்கு பெற்றுத்தருமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் அறிவுறுத்தல் வழங்கியுள் ளனர்.

இதற்காக மக்களின் ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுவதோடு, பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்குநிவாரணங்களை வழங்குவதற்காக இலங்கை ஆளும் தரப்பால் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரிதிநிதியூடாக ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களும் பெற்றுக் கொடுக்கப் படவுள்ளது.

இதன்படி, தங்களின் நன்கொடைகளை 11.04.2024க்கு முன்னர், இலங்கை வங்கியின் (7010), தப்ரோபன் (747) கிளைகளில் 7040016 எனும் கணக்கு இலக்கத்திற்கு 'ஜனாதிபதியின் செயலாளர்' என்ற பெயரில் வைப்பிலிடுமாறும், அதற்கான பற்றுச்சீட்டை 077- 9730396 எனும் இலக்கத்திற்கு வட்ஸ்அப் ஊடாக அனுப்பிவைக்குமாறும் ஜனாதிபதி செயலகம் கேட்டுக்கொள்கிறது.

# சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவ ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாண்மைத் துறைக்கு தொழிற்பாட்டு மூலதனம் ஒத்துழைப்புக்களைவழங்குவதற்கு ஆசிய அபிவிருத்திவங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

உத்தேச வேலைத் திட்டத்தின்மூலம்தற்போது நடைமுறைப்படுத்தப்படும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலானதொழில்முயற்சியாளர்களுக்கு தத்தமது வியாபாரங்களைமேலும் விரிவாக்கம் செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும்தேவையான கடன்வசதிகளை அனுமதிபெற்றவணிகவங்கிகள் மற்றும் அனுமதிபெற்ற விசேட வங்கிகள் மூலம் சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நிலவுகின்ற பொருளாதார பின்னடைவின் விளைவுகளாலும்மற்றும் அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாலான வெளிப்புறக் காரணிகளின் விளைவுகளாலும் உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, சுற்றுலாத்துறை,ஆடைக் கைத்தொழில்துறை மற்றும் இதர வணிகத் தொழிற்பாடுகள் சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களில் குறிப்பிடத்தக்க தொகையினருக்குதமது தொழில் முயற்சிகளை மேற்கொண்டு செல்வதற்குப் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. அதற்கான சலுகையாகவே ☞ 8

## இனி இது .....

என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அதனாலேயே நிமல் லன்ஸா தலைமையில் ஒரு புதிய கூட்டணியை அமைத்து மொட்டுக் கட்சியிலிருந்தும் ஆட்களைப் பிரித்தெடுத்து ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பல மாதங்களாக ரணில் ஈடுபட்டு வருகின்றார்.

இருந்தாலும் அந்தப் புதிய கூட்டணியும் நம்பிக்கை தரும் அளவிற்கு பெரும் தாக்கங்களைச் செல்லுத்தவில்லை என்பதே உண்மை. அந்தக் கூட்டணியின் இரண்டு கூட்டங்கள் அண்மையில் நடந்தன. அதில் ஒன்று கொழும்பில் நடந்தது. கூட்டத்திற்குக் கணிசமான ஆட்களைத் திரட்ட முடிந்தபோதும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை வெல்ல வைப்பதற்கான அலையை அந்தக் கூட்டத்தாலோ அதில் திரண்டவர்களாலோ ஏற்படுத்த முடியாது என்பதும் தெரிந்தது. இந்த நிலையில் பொதுஜன பெரமுனவின் ஆதரவு, ராஜபக்சக்களின் தயவு இன்றி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை ரணில் விக்கிரமசிங்க நினைத்தும் பார்க்க முடியாது என்பதே இன்றுவரையுள்ள நிலை.

பெரமுனவோ ரணிலைத் தூக்கித் தனது தோள்களில் சுமக்கும் எண்ணத்தில் இல்லை. பெரமுன தனித்து ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டால் வெற்றி பெற முடியாது என்கிற உண்மை ராஜபக்சக்களுக்கு நன்று தெரிந்திருந்தாலும் ரணிலைத் தாமாகவே மீண்டும் ஜனாதிபதியாக்கும் திட்டத்துடன் ராஜபக்சக்கள் இல்லை என்பது தெரிகிறது. தமது கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக இல்லையா என்பதை ரணில்தான் முடிவு செய்யவேண்டும் என்று மகிந்த ராஜபக்ச அண்மையில் தெரிவித்திருக்கிறார். அதாவது ரணிலாக வந்து பெரமுனவிடம் கேட்டால் பெரமுன அவரை ஆதரிக்கக்கூடும் என்பதுதான் செய்தி.

ரணில் அப்படித் தம்மிடம் வந்து வீழும் வரையில் மூத்த ராஜபக்சக்கள் காத்திருந்தாலும் இளைய ராஜபக்சக்களுக்கு அதில் உடன்பாடில்லை என்பது கட்சிக்குள் அவர்கள் நகர்த்திவரும் காய்கள் மூலம் தெரிகின்றது. ராஜபக்ச குடும்பத்தின் இளவலான நாமலுக்குத்தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்கிற ஆசை, விருப்பம், அவா எல்லாமே இருக்கின்றன. இளையவர்கள் ஆட்சிக்கு வந்தால்தான் இந்த நாட்டை மீட்கமுடியும் என்று அவர் நம்புகின்றார். ஆனால், நாமலுக்கு இன்னும் காலம் இருக்கின்றது, இப்போது அவசரப்பட்டு எல்லாவற்றையும் போட்டுடைக்க வேண்டாம் என்பது மூத்த ராஜபக்சக்களின் கணிப்பு. இளவல் அதனைச் செவிமடுப்பதாக இல்லை.

பெப்ரவரி 25 மாத்தளையில் நடந்த பொது ஜன பெரமுன கட்சியின் மாவட்டக்குழுக் கூட்டத்தில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்சவைத் தெரிவு செய்யவேண்டும் என்று ஏகமனதாக முடிவு செய்திருக்கிறார்கள். இதற்கு கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் உள்ளிட்ட சில -மூத்த தலைவர்களும் ஆதரவு. அவர்கள் எல்லோரும் அந்தக் கூட்டத்தில் பிரசன்னமாகி இருந்தார்கள்.

ஹோட்டல் மாத்தளையில் நடந்த இந்தக் கூட்டத்திற்கு கட்சியின் மாத்தளை மாவட்டத் தலைவர் ஜானக்க பண்டார தென்னக்கோன் மற்றும் அவரது மகனும் இராஜாங்க அமைச்சருமான பிரமித்த பண்டார தென்னக்கோன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பலரும் கிராமங்களில் இன்னமும் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு இருக்கின்றது என்பதால் நாமலைத் தேர்தலில் முன்னிறுத்துவது பயனுள்ளது என்று தெரிவித்துள்ளனர். அதனடிப்படையிலேயே நாமலின் பெயர் ஜனாதிபதி வேட்பாளருக்கு முன்மொழியப்பட்டுள்ளது.

கட்சிக்குள் நாமலை அடுத்த தலைவராக உயர்த்துவதற்கு இதுபோன்ற நகர்வுகள் பெரிதும் உதவும் என்பதால் மூத்த ராஜபக்சக்கள் அதனை வரவேற்பார்கள் என்றபோதும் தேர்தலில் ஒரு வேட்பாளராக நாமலைக் களமிறக்கி அவரது எதிர்காலத்தை பாழாக்க அவர்கள் விரும்பமாட்டார்கள் என்று ராஜபக்சக்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடுஇ சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சனைகளிற்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும்இ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வினை வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வினை வேண்டியும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என்றும் அதேசமயம் 29.02.2024 வியாழக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் 28.02.2024 மற்றும் 29.02.2024 ஆகிய இரு தினங்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தினை பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொள்ளவிருக்கின்றது. அத்துடன் இன்று காலை 11.00 மணியளவில் யாழ் பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் முன்னெடுப்பது என்றும் நாளை வியாழக்கிழமை கொழும்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் நடைபெறவுள்ள கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் கலந்துகொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் வட பிராந்திய தலைவர் அறிவித்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் பொலிசாரின் விசாரணைகளுக்கு மேலதிகமாக தமது அதிகார சபையின் உள்ளக விசாரணைகளை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இதேவேளை வடக்கு மாகாணத்திற்குள் சேவையில் ஈடுபடும் அனைத்து மினி பஸ் உரிமையாளர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், அறிவுறுத்தல்களைப் பின்பற்றாத பஸ்களின் வழிதட அனுமதி நிரந்தரமாக இரத்து செய்யப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் வடபிராந்திய தலைவர் தெரிவித்தார்.

## ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தெரிவாகிய நான் அப்போதைய ஆளும் தரப்பு நாட்டில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பில் ஒத்துழைப்பு வழங்கினேன்.

இருப்பினும் சகல தரப்பினரது எதிர்பார்ப்புக்களையும் முழுமையாக இல்லாதொழியும் வகையில் கடந்த காலங்களில் பல சம்பவங்கள் இடம்பெற்றன.

இவ்வாறான பின்னணியில் நாடாளுமன்ற உறுப்பினராக அரச இயந்திரத்தில் ஒன்றிணைவதும், அரச செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடுவதும் இளம் தலைவருக்கு பொருத்தமற்றது.

இவ்வாறான நிலையில் எனது அரசியல் சிந்தனைகளை இவ்வாறான சூழலில் மேம்படுத்திக் கொள்வது கடினமானதாக அமையும்.

இதனால் தற்காலிகமாக இந்த அரச இயந்திரத்தில் இருந்து விலக தீர்மானித்துள்ளேன். மேற்குறிப்பிட்ட காரணத்தை மேற்கோள்காட்டி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்கிறேன் என்று தெரிவித்திருக்கிறார்.

## சபாநாயகருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனே சபையில் எதிர்ப்பு தெரிவித்து வந்தார்.

ஆனால் பின்னர் சுமந்திரன் எம்.பி. நாடாளுமன்ற அறைக்குச் சென்று அங்கு சட்டமா அதிபர், உள்ளிட்டவர்களுடன் இது தொடர்பாக கலந்துரையாடிய போது, அவர் இணங்கினார்.

அதனால் நிகழ்நிலை காப்புச் சட்டத்தை அனுமதிக்க சபாநாயகர் நன்கு ஆராய்ந்தே கைச்சாத்திட்டுள்ளார். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. என்றாலும் எதிர்கட்சிகள் தங்களின் அரசியல் நோக்கிலேயே தற்போது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்கின்றன.

அத்துடன் ஆளும் தரப்பு தற்போது நாட்டின் பொருளாதாரத்தை படிப்படியாக உறுதிப்பாட்டுக்குக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அதேநேரம் மக்களுக்குத் தேவையான நிவாரணங்களையும் வழங்க நடவடிக்கை எடுத்துவருகிறது. குறிப்பாக அஸ்வெசும நிவாரணத்தை சுமார் 24 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதேபோன்று காணி உறுதி இல்லாதவர்கள் 20 இலட்சம் பேருக்கு உரிமை வேலைத்திட்டம் ஊடாக காணி உறுதி வழங்க நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அத்துடன் அடுத்துவரும் காலங்களில் எரிபொருட்கள் எரிவாயு விலைகளில் குறைப்பு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறது. மின்சார கட்டணத்தைக் குறைக்கத் தீர்மானித்திருக்கிறது. இவ்வாறு ஆளும் தரப்பு மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும்போது அதற்கு எதிராக பிரசாரம் மேற்கொள்ள எதிர்க்கட்சிகளிடம் எதுவும் இல்லை. அதனால் மக்கள் அவர்களை நிராகரிக்கும் நிலை ஏற்படும். அதனை மறைப்பதற்கே தற்போது எதிர்க்கட்சி சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவந்து மக்களின் கவனத்தை திசை திருப்ப முயற்சிக்கிறது.

எனவே எதிர்க்கட்சிகளின் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்கட்சிகளின் இயலாமையை மறைப்பதற்கு கொண்டுவரப்படுவதாகும். அது நாடாளுமன்றத்தில் தோல்வியடையும் என்பது அவர்களுக்குத் தெரியும். இதற்கு முன்னரும் இவ்வாறான பல நம்பிக்கையில்லா பிரேரணைகளைக் கொண்டுவந்துபோது அவை தோல்வியடைந்தன. அதேபோன்று தற்போது சபாநாயகருக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா பிரேரணையும் நாடாளுமன்றத்தில் புஷ்வாணமாகும் என்றார்.

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் சபாநாயகர் அதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது தொடர்பில் சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைக்கமையவே தான் செயற்பட்டதாகச் சபாநாயகர் குறிப்பிடுகின்றார். சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தைவிட உயர்ந்தவர் அல்ல. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை சட்டமா அதிபரால் மாற்ற முடியாது என்பதைச் சபாநாயகர் அறிந்திருக்கவில்லையா? இது இவ்வாறிருக்க மறுபுறம் அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரம் இன்றி பொலிஸ்மா அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பிரஜைகளைத் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியவர் என்று உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஒருவரே இன்று பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான ஒருவர் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டால் நாட்டில் எவ்வாறு சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியும்? என்றார்.

## பொலிஸ் மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தையும் தடுப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் உள்ளிட்ட ஏழு தரப்பினர் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி, மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனுக்கள் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

தேசபந்து தென்னகோன் ஏற்கனவே பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதால், மனுக்களை தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வது அநாவசியமானது என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ்மா அதிபராக செயற்படுவதை தடுக்குமாறு மனுக்களில் கோரப்பட்டுள்ள போதிலும், அவர் தற்போது பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது, மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான சாலிய பீரிஸ், ஜெஃப்ரி அழகரட்ணம் ஆகியோர் நீதிமன்றத்தில் விடயங்களை தெளிவுபடுத்தினர்.

குறித்த தரப்பினர் நீதிமன்றத்தில் அடிப்படை ஆட்சேபனைகளையும் எதிர்ப்பு ஆட்சேபனைகளையும் தாக்கல் செய்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், தேசபந்து தென்னகோனை ஜனாதிபதி பொலிஸ்மா அதிபராக ஞாயிற்றுக்கிழமை நியமித்துள்ளார் எனவும், பதில் பொலிஸ்மா அதிபரின் பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் அவர் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டமை சட்டவாட்சியின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் என ஜனாதிபதி சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதியர்சர்கள் குழாம், தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு தேசபந்து தென்னகோன் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டதை முக்கியமான விடயமாகக் கருதி மனுக்களை மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான திகதிகளை நிர்ணயித்தது.

இதற்கமைய, மனுக்கள் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, இந்த மனுக்கள் தொடர்பில் இடையீட்டு தரப்பாக இணைவதற்கு மகா சங்கத்தினர் அனுமதி கோருகின்றனர் என்று ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா உயர் நீதிமன்றத்தில் இன்று அறிவித்தார்.

கொட்டபிட்டியே ராஹுல தேரர், உடுவே தம்மாலோக தேரர், பேராசிரியர் அக்குரெட்டியே நந்த தேரர், பேராசிரியர் இந்துராகாரே தம்மரத்தன தேரர், பேராசிரியர் அகலகட சிறிசுமண தேரர், பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர், போதாகம சந்திம தேரர் ஆகியோரே இடையீட்டு மனுதாரர்களாக இணைவதற்கு அனுமதி கோரியுள்ளனர்.

இதற்கான அனுமதியை வழங்குவதா, இல்லையா என்பதை ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி அறிவிப்பதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வேறொரு வழக்கு விசாரணைக்காக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உயர் நீதிமன்றத்திற்கு இன்று வருகை தந்திருந்தார்.

காரணங்களை கூறாமல் தாம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டதன் ஊடாக தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மஹிந்த ரலபனாவ தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமையவே அவர் இன்று நீதிமன்றத்திற்கு வருகை தந்திருந்தார்.

இனிவரும் காலத்தில் பொலிஸ் திணைக்களத்தின் கீழுள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அல்லது பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவிற்கு எவரேனும் அழைக்கப்படுவாராயின், அதற்கான காரணங்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் விரிவாக அறிவிக்கப்படுவதற்கான சுற்றுநிருபமொன்றை வெளியிட நடவடிக்கை எடுப்பதாக பொலிஸ்மா அதிபர் சார்பில் ஆஜரான அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி ஷமிந்திர விக்ரம மன்றில் தெரிவித்தார். இந்த மனு மீதான விசாரணை மே மாதம் 9 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தேஷபந்து தென்னகோனை நியமிப்பதற்கு அரசியல் அமைப்பு பேரவை முன்னெடுத்த செயற்பாடுகள் பிரச்சினைக்குரியவை என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். எனினும், பொலிஸ்மா அதிபரின் நியமனத்தை அங்கீகரிக்கும் செயற்பாடு சட்டரீதியாகவே முன்னெடுக்கப்பட்டதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அரசமைப்புப் பேரவை கூடியபோது, தன்னுடன் பிரதமர் தினேஷ் குணவர்தன, சாகர காரியவசம், நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்டோரும் தேசபந்து தென்னகோனின் நியமனத்திற்கு அனுமதி வழங்கினர் என சபாநாயகர் கூறினார்.

### புதிய நிதி ஒழுங்குச் சட்டத்தை தயாரிக்க

# திறைசேரிச் செயலருக்கு அதிகாரம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

புதிய நிதி ஒழுங்குச் சட்டமொன்றைத் தயாரிப்பதற்கும், உத்தேச அரச நிதி முகாமைத்துவச் சட்டத்திற்கு குறித்த நிதி ஒழுங்கு சட்டகத்தை உட்சேர்ப்பதற்கு 2023.05.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் அரச நிதித் திணைக்களத்தால் ஏனைய திறைசேரித் திணைக்களம் மற்றும் பிரதி திறைசேரிச் செயலாளர்கள் இருவரின் இணைத்தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் ஆலோசனை மற்றும் கொள்கைரீதியான வழிகாட்டலின்கீழ் அடிப்படைச் சட்டமூலவரைபொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த அடிப்படைச் சட்டமூல வரைபின் அடிப்படையில் அரசின் நிதிச்சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும், உத்தேச சட்டமூலம் சட்டவரைஞரால் தயாரிக்கப்படும் வரைக்கும் நிதிப் பிரமாணத்தைத் தயாரிக்க ஆரம்பிப்பதற்கு விசேட குழுவொன்றை நியமிப்பதற்காக திறைசேரி செயலாளருக்கு அதிகாரத்தை வழங்குவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# அரசின் நுண்கடன் செயற்றிட்டத்தால் மக்களின் வாழ்வாதாரத்தின் மேம்பாடு

## பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம

(சர்ஜ/ன் லாபீர்)

நாட்டில் வறுமையைப் போக்கி நிலைபேறான அபிவிருத்தியை நிலை நாட்டுவதற்கு தற்போதைய அரசாங்கம் முனைப்புடன் பல்வேறுபட்ட தேசிய திட்டங்களை அமுல்படுத்திக்கொண்டு வருகின்றது. இந்தச் செயற்றிட்டங்களைப் பொதுமக்கள் முறையாகக் கடைப்பிடிக்கின்றபோது நாட்டில் வறுமையை இல்லாமல் செய்து நிலைபேறான அபிவிருத்தியை நிலை நாட்டலாம் என்று சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கிராம சக்தி தேசிய வேலைத்திட்டத்தில் சுழற்சி முறையிலான நுண் கடன் வாழ்வாதார உதவித்தொகை வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை சம்மாந்துறை புளோக் ஜே வெஸ்ட்-02 கிராம சேவை பிரிவில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ ஜெஸீலா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில் -

கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தில் நாட்டில் 5000 பின்தங்கிய கிராமங்களைத் தெரிவு செய்து அக்கிராமங்களை முழுமையான முறையில் வறுமையிலிருந்து விடுவித்து அபிவிருத்தியடைய வைப்பதே இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

நுண்கடன் செயற்றிட்டங்களூடாக வாழ்வாதார கடன் உதவிகளை வழங்கி அதனூடாக பல்வேறுபட்ட சமூகவியல் பிரச்சினைகள் ஏற்பட்டு அவை மரணம் வரை கொண்டுசென்ற விடயங்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்கின்றோம். இந்தச் செயற்றிட்டங்களை முறையாக செயற்படுத்தி மக்களுக்கு சுமைகளை வழங்காமல் அரசாங்கம் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதனூடாக நாட்டில் வறுமையை ஒழித்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் எனக் குறிப்பிட்டார்.



மேலும் இக் கிராமத்தில் சுமார் 1.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் நுண்கடன் செயற்திட்டம் நான்கு கட்டங்களாகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு இருகின்றமையானது இக்கிராமத்தில் இத்திட்டத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்கின்றார்கள் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இந்நிகழ்வில் விடயத்துக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.எம் பௌஸான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம் நியாஸ் உட்பட சங்க நிர்வாக உறுப்பினர்கள் பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05)

# வவுனியா வடக்கு – இராசபுரம் குடியேற்ற மக்களுக்கு லைக்கா ஞானம் அறக்கட்டளையால் பஸ் அன்பளிப்பு












வவுனியா வடக்கு, சின்னடம்பன், இராசபுரம் கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மாணவர்களின் பயணத்திற்காக பஸ் ஒன்று புலம்பெயர் தமிழர் அமைப்பால் திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பல்வேறு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் பூந்தோட்டம் முகாமில் தங்கியிருந்த நிலையில் புலம்பெயர் தமிழ் வர்த்தகரான அல்லிராஜா சுபாஸ்கரனின் லைக்கா ஞானம் அறக்கட்டளை ஊடாக 150 குடும்பங்களுக்கு வவுனியா வடக்கு, சின்னடம்பன், இராசபுரம் பகுதியில் காணியுடன் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு கடந்த 2015 ஆம் ஆண்டு குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இங்குள்ள 50 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்திற்கு பல்வேறு சிரமங்களுடன் சீரற்ற வீதியால் காட்டுப் பாதையூடாக நடையாகவும், சைக்கிளிலும் சென்று கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் அந்த மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக லைக்கா ஞானம் அறக்கட்டளை ஊடாக பஸ் ஒன்று வழங்கப்பட்டதுடன், அதற்கான சாரதியும் நியமிக்கப்பட்டுள்ளார். குறித்த பஸ் அக் கிராமத்தில் இருந்து தினமும் பாடசாலை சேவையில் ஈடுபடவுள்ளது.

இதன்போது, கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கி வைக்கப பட்டதுடன், இலங்கைக்காக சர்வதேச ரீதியில் பளுதூக்கல் போட்டியில் பங்கு பற்றி வரும் யாழ் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த ச.புசாந்தன் அவர்களுக்கு அவரது வெற்றி வாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாக 21 லட்சம் ஷரூபா பணமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் அரசாங்க அதிபரும், லைக்கா ஞானம் அறக்கட்டளையின் இலங்கைக்கான துணைத் தலைவர் சுந்தரம் அருமைநாயகம், இலங்கையின் பளுதூக்கல் வீரர் ச.புசாந்தன், வவுனியா வடக்கு பிரதேச சபை செயலாளர், லைக்கா ஞானம் அறக்கட்டளையின் பிரமுகர்கள், கிராம ஆர்வலர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05-100)

# கிராம சக்தி வேலை திட்டத்தின்கீழ் 15 லட்சம் ரூபா நிதிக் கடன் உதவி



(சர்ஜ/ன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முகம்மது ஹனிபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக கிராம சக்தி தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை புளோக் ஜே வெஸ்ட்-2கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 32 பயனாளிகளுக்கு சுழற்சி முறையிலான நுண்கடன் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ. ஜெஸிலா தலைமையில் புலோக் ஜே.வெஸ்ட் -02 பல்தேவைக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இக் கிராமத்தில் வாழ்வாதார தொழில் மேம்பாட்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட 32 பயனாளிகளுக்கும் 1.5.மில்லியன் நிதியுதவி கடனாக வழங்கப்படவுள்ளது. என்பதுடன் இதுவரை 3 கட்டங்கள் சிறப்புற இடம்பெற்றதுடன் இது 4 ஆம் கட்ட நிதி வழங்கல் செயற்திட்டம் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த நுண்கடன் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு கடனுதவித் தொகைகளை வழங்கி வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் விடயத்துக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.எம் பௌஸான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம் நியாஸ்,கிராம சக்தி சங்க நிர்வாகிகள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர். (05)

# கம்பஹா மாவட்டத்தில் பேரெழுச்சிபெற்ற தேசிய மக்கள் சக்தி பெண்கள் மகாநாடு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையின் பல அரசியல் தலைமைகளின் கேந்திரமான கம்பஹா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸநாயக தலைமையில் பெண்கள் மகாநாடு இடம்பெற்றது.

இம் மகாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், சர்வசமய பெரியார்கள் மற்றும் கம்பஹா மாவட்டத்தின் பல பிரதேசங்களையும் சேர்ந்த மூவின பெண்களும் கலந்து கொண்டனர்.(05)

# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை நலன்புரிசங்க பொதுக்கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நலன்புரிச் சங்கப் பொதுக்கூட்டம் திங்கட்கிழமை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நலன்புரிச் சங்கத்தின் 2024ஃ2025 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகீலா இஸ்ஸதீன் தலைவராகவும், வைத்தியர் ஏ.எஸ்.எம்.பௌஸாத் உப தலைவராகவும், எம்.எஸ். எம்.நியாஸ் செயலாளராகவும்,

எஸ்.பாஸ்கரன் பொருளாளராகவும் திருமதி எஸ்.சஞ்ஜீவன் உப செயலாளராகவும், திருமதி எம்.எஸ்.வீ.வஜீதா, திருமதி என். கவிதா, எஸ்.சிறிதரன், திருமதி எஸ்.இந்திரகுமார், எம்.ஏ.அபூபக்கர் (சா

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏன் இப்படி?

காஸாவிற்கான சிறுவர் நிதியமொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. காஸாவில் இடம்பெற்ற மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இந்த யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்த ஆண்டுக்கான இப்தார் கொண்டாட்டத்திற்காக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கும் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டை இந்த நிதியத்திற்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக இலங்கை ஆளும் தரப்பு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாகவும் வழங்கவும் முடி–வு செய்துள்ளது. நன்கொடையாளர்களும் அதற்கு பங்களிக்க முடியும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

காஸாவில் இஸ்ரேலின் தாக்குதலினால் பலஸ்தீன மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கிறார்கள், இனப்படுகொலையை எதிர்கொள்கிறார்கள் என்பதெல்லாம் உண்மைதான். அவர்களுக்கு உதவிகள் தேவைப்படுகின்றன; அவை வழங்கப்படவேண்டும் என்பதும் அவசியம்தான். அதனால் இலங்கையின் இந்த முயற்சியில் குறை சொல்வதற்கோ பிழைபிடிப்பதற்கோ ஒன்றும் இல்லை. அதேநேரம், இலங்கையிலும் இதேபோன்று போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இன்னமும் அவலத்திற்குள் சிக்கிக்கொண்டுள்ள நிலையில் அவர்களைப் பற்றி கொழும்பு அரசுகளுக்கு ஏன் இந்தக் கரிசனையும் அக்கறையும் தோன்றவில்லை என்கிற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இலங்கை ஆளும் தரப்புக்களால் தமிழர்கள் மீது முன்னெடுக்கப்பட்ட போரால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும் சிறுவர்களும்தான். ஆனால், அவர்களுக்கு உதவுவதற்காக கொழும்பு ஒருபோதும் தனியான நிதியங்களையோ சிறப்புத் திட்டங்களையோ இதுவரையில் அறிவித்ததில்லை. போருக்குப் பின்னர் வடக்கு கிழக்கில் மட்டும் 80 ஆயிரத்துக்கும் அதிகமான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இருந்தன என்று மதிப்பிடப்பட்டது. அந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் குழந்தைகள் இருந்தார்கள். குடும்பத்தின் வருமானம் தரும் தலைவரை இழந்த நிலையில் அந்தக் குழந்தைகள், சிறுவர்கள் தமது வாழ்வில் பட்ட துன்பதுயரங்களுக்கு அளவேயில்லை. ஆனால், அப்போதெல்லாம் அவர்களுக்கு உதவ சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தோன்றியதில்லை.

இன்று இந்த பொருளாதார நெருக்கடியான சூழலுக்கு மத்தியிலும் காஸா சிறுவர்களுக்காக ஒரு லட்சம் அமெரிக்க லொடர் நிதியை வழங்க முன்வந்துள்ள ஆட்சியாளர்கள், போரால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சிறுவர்களின் மீட்சிக்கான சிறப்புத் திட்டங்களுக்கென தனியாக ஒரு சதம்கூடச் செலவிட்டதில்லை என்பதே உறுத்தலாகவும் விசனத்திற்குரியதாகவும் இருக்கின்றது. இதனால்தான் தமிழர்கள் இந்த நாட்டில் இரண்டாம் தரக் குடிமக்களாக, வேண்டத்தகாதவர்களாக நடத்தப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு மங்காது ஓங்கி ஒலிக்கின்றது. சிங்கள ஆட்சியாளர்களின் இதுபோன்ற பாராமுகமும் புறக்கணிப்பும்தான் கடந்தகால வன்முறைகளுக்கு அச்சாணி என்பதை கொழும்பு இன்னமும் உணரவில்லை என்றே தோன்றுகின்றது.

# குரக்கன் சால்வையும் சிவப்பு 'டை'யும்

உபுல் யோசப் பெர்னான்டோ

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் இரகசியப் பக்கங்கள் குறித்து ஜேம்ஸ் மேனர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில் அவர் பல் விடயங்களை எழுதியிருக்கிறார். பண்டாரநாயக்கா உள்ளூர் பருத்தித் துணியால் செய்யப்பட்ட தேசிய உடையை அணிந்துகொண்டுதான் பொது மக்களிடம் செல்வார், ஆனால், வீட்டில் கால்சட்டை அணிவார் என்று அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. நாய் சண்டை மற்றும் பில்லியர்ட்ஸ் விளையாட கிளப்புக்கு செல்லும்போது அவர் 'கோர்ட் பாண்ட்' அணிந்து செல்வார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது தந்தையின் இறுதிச் சடங்கின்போது, அவர் தனது தேசிய ஆடைகளைக் கழற்றி விட்டு, மேல் தொப்பி மற்றும் வால் கோட் அணிந்தே தனது தந்தையின் உடலை எடுத்துச் சென்றார் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

ஜே.ஆர்.ஜெயவர்தன வெளியில் செல்லும்போது தனது தேசிய உடையையும், வீட்டில் கால்சட்டையையும் அணிந்திருந்தார் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் டிஎஸ், சேர் ஜோன் கொத்தலாவல மற்றும் டட்லி சேனாநாயக்க ஆகியோர் 'டை கோட்' தான் எப்போதும் அணிந்திருந்தனர். 1960 ஆம்



ஆண்டு ஜுலை மாதம் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், டட்லியின் சகாக்கள், இலங்கையில் அரசியலுக்கு 'டை கோட்' பொருத்தமானதல்ல என்று டட்லியிடம் சுட்டிக் காட்டினர். டட்லி தயக்கத்துடன் தனது தேசிய உடையை அணிந்து கொண்டு கண்டி தலதா மாளிகைக்கு வழிபடச் சென்றது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.


இலங்கையில் பொதுவாக மக்கள் கால்சட்டை அணிந்து வெளியே செல்கின்றனர். ஆனால் வீட்டில் சாரம்தான் அணிகின்றனர். எல்லாமே அவர்களுக்குப் பழக்கமானதுதான். பண்டாரநாயக்ககளும் ஜே.ஆர்களும் நீளக் காற்சட்டைக்குப் (பாண்ட்) பழக்கப்பட்டவர்கள். அதனால்தான் அவர்கள் வெளியே செல்லும்போது தேசிய உடை அணிந்தாலும் வீட்டில் கால்சட்டை அணிந்தனர்.

பண்டாரநாயக்கா வெள்ளைச் சாரம் மற்றும் 'நஷனல் எனப்பட்ட நீள வெள்ளை மேலாடையை தேசிய அரசியலின் அடையாளமாக்கினார். 1956ஆம் ஆண்டில், அவர் மருத்துவர்கள், ஆசிரயர்கள் மற்றும் விவசாயிகள் தொழிலாளர் படையை உள்ளடக்கிய சங்கத்தை உருவாக்கினார், இது மேற்கத்திய ஆடை மற்றும் தேசிய ஆடைகளுக்கு இடையே ஒரு போரைத் தொடங்கியது. ஐ.தே.க ஆதரவாளர்கள். டை கோட் மற்றும் கால்சட்டை அணிந்த மேற்கத்தியர்கள்,

ஒரு பக்கத்தில் மேற்கத்திய பாணியில் ஆடை அணிந்த ஆசிரியர்கள் மற்றும் டை கோட் அணிந்த அதிகாரிகள். மறுபக்கத்தில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் வெள்ளைச் சாரமும் 'நஷனலும்' உடுத்த உள்ளூார், சிங்கள ஆசிரியர்கள் மற்றும் தொழிலாளர்கள்.

சுதந்திரக் கட்சி அறிமுகப்படுத்திய அந்த மேற்கத்திய பிம்பத்துக்கு எதிரான அரசியலை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களான ஜே.ஆரும் பிரேமதாசவும் உடைத்தெறிந்தார்கள். அவர்களும் தேசிய ஆடைகளையே அணிந்தார்கள்.

ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக பதவியேற்ற பின்னர் மீண்டும் இந்த 'டை



கோட்'டுக்கு எதிராக தேசிய உடையை உள்நாட்டு அரசியலாக அடையாளப்படுத்தும் போக்கு முன்னுக்கு வருகிறது. ரணில் 'டை கோர்ட்' அணிகின்ற ஒருவர். அவரது சகாக்கள் அந்த 'டை கோட்'டை கழற்றச் சொன்னார்கள், ஆனால் அவர் அதற்கு உடன்படவில்லை.

2005 ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் 'டை கோட்' உடை அவரைப் பெரிதும் பாதித்தது. மஹிந்த வெள்ளைச் சாரமும் மேலே நஷனலும் அணிந்தார். அதற்கு மேலே குரக்கன் நிறச் சால்வை ஒன்றையும் அணிந்திருந்தார்.

குரக்கன் சால்வை போட்டு நஷனல் அணிந்திருந்த மகிந்தவின் அந்த உள்ளூர் தோற்றத்தை ஜேவிபி மக்களிடம் வெகுவாகச் சந்தைப்படுத்தியது. ரணில் அந்தத் தேர்தலில் தோற்பதற்கு அதுவே ஒரு பெரிய காரணமாக அமைந்தது.

'டை-கோட் அணிந்த மேற்கத்திய சார்பு ரணில் உங்களுக்கு வேண்டுமா? அல்லது 'நஷனல்' அணிந்த தேசியத் தலைவரான மகிந்த வேண்டுமா ? என்று ஜேவிபி மக்களிடம் கேட்டது.

மஹிந்தவின் மேடையில் அப்போதைய



ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தொடங்கி அனைத்து ஜே.வி.பி தலைவர்களும் கேட்ட கேள்வி இதுதான். ஜே.வி.பி உருவாக்கிய அந்த தேசிய அலையில் மகிந்த நன்றாக நீந்தினார்.

2010 ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி - ஜேவிபி பொது வேட்பாளராக சரத் பொன்சேகா களமிறங்கினார். இராணுவ சீருடையை கழற்றிவிட்டு அவரும் வெள்ளை நஷனல் அணிந்தார். அது மகிந்தவின் தேசிய உருவத்திற்கு சவால் விடும் வகையில் இருந்தது.

மைத்திரிபால 2015 இல் வெள்ளையும் வெள்ளையுமாக மக்கள் முன் வந்து நின்றார். கிராமத்துக் கதைகளை நன்றாகப் பயன்படுத்தி மஹிந்தவின் தேசிய பிம்பத்தை மைத்திரி தன் வசப்படுத்தினார்.

மகிந்தவின் இந்த தேசிய பிம்பத்திற்கும் ரணிலின் 'டை கோட்' மோதலுக்கும் இடையில் கோட்டாபய சிக்கிக் கொண்டார். அவர் 'டை கோட்' அணியாமல், புஷ் ஷர்ட் மற்றும் கால்சட்டை அணிந்தார். அதன் மூலம் தான் பாரம்ப ரிய அரசியல்வாதி (5ஆம் பக்கம் பார்க்க...)

# தென்னிந்திய கும்மாள நடிகைகளின் வருகை சமூகத்தைப் போதை மயப்படுத்தும் ஏற்பாடே

## பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் பொ .ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



தமிழ்ப் பிரதேசங்களில் தினம் தினம் போதை மரணங்கள் பதிவாகும் அளவுக்கு எமது இளைய தலைமுறை இன்று போதைப்பொருள்களுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டகையோடு இளைஞர்களை இலட்சியப் பாதைகளில் இருந்து திசை திருப்பும் நோக்கில் போதைப் பொருள்கள் திட்டமிட்டு

விநியோகிக்கப்பட்டன .இன்று அதைக் கைவிட முடியாத அளவுக்கு போதை பெரும் புற்று நோயாகத் தமிழ்ச் சமூகத்தை அரிக்க ஆரம்பித்து விட்டது.

இது போதாது என்று , இப்போது திட்டமிட்டுத் தென்னிந்தியாவில் இருந்து கும்மாள நடிகைகள் வரவழைக்கப்படுகின்றனர்.இதுவும் தமிழ்ச் சமூகத்தைப் போதை மயப்படுத்தும் இன்னுமொரு நிகழ்ச்சி நிரலே என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை மல்லாகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எமது மக்களின் பொழுது போக்குக்காக என்று சொல்லி இந்தியாவில் இருந்து கும்மாள நடிகைகள் கூட்டிவரப்படுகின்றனர் .ரம்பா , ஊர்வசி , மேனகாக்களைக் கொண்டு முனிவர்களின் தவத்தைக் கலைத்த கதைகள் புராணங்களில் நிறைய உண்டு. இந்தக் கதைகள்தாம் இப்போது எம் கண்முன்னே அரங்கேறத் தொடங்கி உள்ளன .கஞ்சாவும் மாவாவும் ஐஸ்/ம் கெரோயினும் மாத்திரம் போதைப்பொருள்கள் அல்ல. மதியை மயக்கும் எல்லாமே

போதைகள்தாம். அந்தவகையிலேயே, எமது இளைஞர்களைக் குறிவைத்து கும்மாள நடிகைகளின் களியாட்ட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இவை தொடர்ந்து நிகழுவதைத் தவிர்க்கும் முயற்சிகளில் தமிழ்ச் சமூகத்தின் நலனில் அக்கறையுள்ள அனைவரும் ஈடுபடவேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் உள ஆற்றுப்படுத்தலுக்குப் பொழுது போக்குகள் அவசியம். ஆனால், அந்தப் பொழுதுபோக்குகள் பண்பாட்டுச் சீரழிவுக்கு வித்துடுவனவையாக இருக்கக் கூடாது. பண்பாடு என்பது ஓர் இனத்துக்குத் தனித்துவமான , அந்த இனம் தன்னை யார் என்று உணர்ந்து கொள்ளவும் , மற்றவர்களுக்குத் தன்னை யார் என்று அடையாளப்படுத்தவும் கூடிய ஒரு வாழ்க்கை முறை. இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கின்ற நாம், எமது இனத்தின் பண்பாட்டு அடையாளங்களை எந்தக் கேளிக்கைளின் பொருட்டும்

இழந்து விடக்கூடாது. நாமும் நமக்கென்று பல கலைகளைக் கொண்டிருக்கிறோம். அவற்றை மேடையேற்ற உணர்வுள்ள பணம் படைத்தவர்கள் முன்வரவேண்டும். - என்றும் தெரிவித்துள்ளார். (05)

# குரக்கன் சால்வையும்...

இல்லை என்பதைக் காட்ட முயன்றார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றிய அன்று ராஜபக்ச குடும்பத்தினரால் தேசிய வெள்ளைச் சாரமும் வெள்ளை நஷனலும் அணிய முடியாவிட்டாலும் சிவப்பு குரக்கன் சால்வையை அணிந்திருந்தனர்.

கோட்டாபயவுக்கும், ராஜபக்ச குடும்பத்துக்கும் இடையே முதல் மோதல் உருவானதும் இந்த உடைத் தேர்வால்தான். சுதந்திர தினத்தன்று, அவர் தனது ஆளும் தரப்பினரின் விமர்சனங்களுக்கு மத்தியிலும் தேசிய உடை அல்லது 'டை- கோட்'டுக்குப் பதிலாக புஷ் சட்டை அணிந்திருந்தார்.

2005இல், 'டை-கோட்' வேண்டாம், தேசிய உடைதான் சிறந்தது என்று சொல்ல தேசபக்தர்களுக்கு அவர் பயிற்சி அளித்தார். ஆனால் கோட்டாவுக்குப் பிறகு ஜனாதிபதியான ரணிலோ இதே தேசபக்தர்களுக்கு 'டைகோட்' அணிவித்தார். டை-கோட் அணியும் ரணிலை வேண்டாம் என்று கூறிய பெரமுனவினர் பின்னர் ரணிலை ஜனாதிபதியாக்க இரு கைகளையும் சேர்த்தே தூக்கினர். அதுமட்டுமல்ல மெல்ல அவர்களும் 'டை கோட்' அணியத் தொடங்கினர். தேசிய உடை அணிந்து வந்த அலுத்கமகே மற்றும் ஷெஹான் சேமசிங்க ஆகியோர் ரணில் ஜனாதிபதியான பின்னர், 'டை கோட்' அணியத் தொடங்கினர்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் பெரமுன கட்சி உறுப்பினர்கள் குரக்கன் சால்வையைத் தேட மாட்டார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் சிவப்பு 'டை'களைத் தேடவேண்டும்.

இலங்கையில் சிவப்பு ஹட்டாரி நாடகம் போன்று பிரபல தொழிலதிபர் தம்மிக்க பெரேரா சிவப்பு 'டை'யில் பிரபலமானவர். பொது ஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் அவரும் முக்கியமான ஒருவர். அமெரிக்க அதிபர் டிரம்ப் சிவப்பு 'டை'யை உலகம் முழுவதும் பிரபலப்படுத்தினார். 2000 ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்காவில் குடியரசுக் கட்சியின் தேர்தல் வெற்றியைக் காட்டும் வரைபடமே சிவப்பால் குறிக்கப்படுமளவிற்கு சிவப்பு 'டை' தாக்கம் நிறைந்திருந்தது. யுஎஸ்ஏ டுடே செய்தித்தாள் அமெரிக்க வரைபடத்தில் குடியரசுக் கட்சியின் வெற்றியை சிவப்பு நிறத்தில் காட்டியது.

தம்மிக்க பெரேராவின் வர்த்தக முத்திரையும் சிவப்பு நிற 'டை' ஆகும். டிரம்புக்கு முன்பே அவர் சிவப்பு 'டை' அணிபவராக இருந்தார். குரக்கன் சால்வையைத் தனது சின்னமாகக் கொண்ட பொது ஜன பெரமுனவின் வேட்பாளராக அவர் சிவப்பு 'டை'யுடன் போட்டியிட விரும்புகின்றார். ரணில் ஐ.தே.க.வாக இருந்தபோது பச்சை, சாம்பல், நீல நிற டைகளை அணிந்திருந்தார். தலைவர் மற்றும் ஜனாதிபதியான பிறகு, அவரும் அவ்வப்போது சிவப்பு 'டை' அணியத் தொடங்கினார்.

சமீபத்திய சிவப்பு 'டை' ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸாநாயக்க. இந்தியா சென்று இந்திய அயலுறவுத்துறை அமைச்சரைச் சந்தித்தபோது அவர் சிவப்பு 'டை' அணிந்திருந்தார். ஜே.வி.பியின் நிறம் சிவப்பு என்பதால் சிவப்பு 'டை' அனுரகுமாரவுக்கு பொருந்தும். ஆனால் அவர் சிவப்பு 'டை' அணிவது, குரக்கன் சால்வையால் கவரப்பட்ட பெரமுன கட்சிக்காரர்களை வளைத்துப்போடத்தான்.

மகிந்தவின் குரக்கன் சால்வையையும், தேசிய உடையையும் அணிவதை விடுத்து சிவப்பு 'டை கோட்' அணிந்து பெரமுனவை ரணிலோ, தம்மிக்கவோ அல்லது அநுராவோ வெற்றி கொள்வார்களா என்பதை இப்போது உறுதியாகக் கூறமுடியாது.

ஆனால் 2024இல் 'டை கோட்' அணியாத ஒரே வேட்பாளர் சஜித் பிரேமதாச மட்டுமே.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir


# மணியங்குளத்தின் கீழ் சிறுபோகத்துக்கு 116 ஏக்.

கிளிநொச்சி அக்கரயன் குளம் கமநல சேவை நிலையத்திற்குறப்பட்ட மணியங்குளத்தின் கீழாக இம்முறை சிறுபோகத்தில் 116 ஏக்கரில் செய்கை மேற்கொள்ள தீர்மானம் 16 ஏக்கரில் நெற்செய்கையும் 90ஏக்கரில் உப உணவு பயிர்ச்செய்கையும் மேற்கொள்ள தீர்மானம்

குறித்த குளத்தின் கீழான சிறுபோக செய்கையின் அளவை தீர்மானிக்கும் கலந்துரையாடல் ஒன்று மணியங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் இன்று காலை 10.30 மணிக்கு அக்கராஜன் குளம் கமநலசேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் சற்குணநேசன் தலைமையில் நடைபெற்றது.குறித்த கலந்துரையாடலில் குறித்த பகுதி விவசாய போதனாசிரியர் மற்றும் விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர். பெருமளவு விவசாயிகள் நெல் தவிர்ந்த உபஉணவு பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டியதற்கமைய 90 ஏக்கரில் உப உணவு பயிர்களும் 16ஏக்கரில் நெற்செய்கையும் மேற்கொள்வதாக தீர்மானிக்கப் பட்டது. (05-113)

# யாழ். பொலிஸ் விடுதிக்குள் மதுபோதையில் அட்டகாசம்

## இரு உத்தியோகத்தர்கள் கைது



யாழ்ப்பாணம் பொலிஸாரின் விடுதிக்குள் மதுபோதையில் அட்டகாசம் செய்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கியிருக்கும் விடுதிக்குள் மது போதையில் நுழைந்து சக பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுகின்ற பொலிஸாரே இவ்வாறு செயற்பட்டமை பலரையும் முகம் சுழிக்க வைத்துள்ளது. (05)

# இலவசமாக பால்மா பக்கெட் விநியோகம்



(சர்ஜ/ன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முகம்மது ஹனீபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் பேரில் அரசாங்கத்தின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து முயற்சிகளுக்கு உதவுவதற்காக லங்கா நிறுவனத்தின் அனுசரணையில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 288 குடும்பங்களுக்கான இலவச பால் மா விநியோகம் செய்யும் நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பால் மா பாக்கெட்களை வழங்கி வைத்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு கௌரவ அதிதியாக கணக்காளர் ஐ.எம் பாரிஸ் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.எம் நவாஸ் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,பயனாளிகள் என பலரும் கலந்து கொணடனர். (05)

# விபத்தை ஏற்படுத்திய சாரதிக்குப் பிணை

(ஹஸ்பர் ஏ.எச் )

கடந்த மாதம் இருபதாம் திகதி திருகோணமலை வவுனியா நெடுஞ்சாலையில் குஞ்சோத்து சந்தி அருகில் அக்கரைப்பற்றிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச்சென்ற போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸால் மோதி ஒருவர் மரணமானார். இவ்வழக்கின் எதிரிகளான பஸ்ஸின் சாரதிக்கும், நடத்துநருக்கும் கெப்பிட்டிகொல்லாவ நீதிவானும், மாவட்டநீதிபதியுமான அசு காஞ்சன தலா ஒரு லட்சம் ஷரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். இவ்வழக்கின் எதிரிகள் கடந்த மூன்று கிழமைகளாக விளக்கமறியலில் இருந்து வந்துள்ளனர். இவர்களினது பஸ்ஸால் மோதி ஒருவர் மரணமான போதும் பஸ்ஸை நிறுத்தாமலும், பொலிஸாருக்குத் தகவல் கொடுக்காமலும் தண்டனை சட்ட கோவையின் பிரிவு 298 இன் கீழும் எதிரிகளான அஜித் ரணசிங்க, சின்னதுரை அமல்ராஜ் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சிரேஷ்ட சட்டதரணி தி.திருச்செந்தில்நாதன் மற்றும் சதுராங்க ஆகியோர் செய்த பிணை விண்ணப்பத்தின் மீது நீதிவான் எதிரிகளை எச்சரித்து பிணையில் விடுவித்தார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## தொழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் கருத்தாடலுக்கு உட்பட்ட 'பரேட்டா' சட்டம் பற்றி குறிப்பிடுவதென்றால், இவ்விடயத்தில் மத்திய வங்கி, நிதி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதில் மாத்திரமே கவனம் செலுத்தியது.

நாட்டின் கையிருப்பு நிலை குறித்து மத்திய வங்கி கவனம் செலுத்தியதா என்று பலதரப்பினரும் கேள்வி எழுப்பினர். மேலும், விவசாயத் துறை 22% - 8% வரையிலும், தொழில் துறை 38% - 32% வரையிலும் வீழ்ச்சியடைந்துள்ளமைக் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 17 முறை கடன் பெற வேண்டியிருந்தது. அவ்வாறு செய்தாலும் பொருளாதாரத்தை மீட்க முடியவில்லை. நாம் பொருளாதாரத்தில், சேவைத் துறையை தொடர்ந்து விரிவுபடுத்தியுள்ளோம். தொழில் துறை மீது காட்டப்பட்ட அலட்சியத்தால், உற்பத்தித் திறன் குறைந்துள்ளது.

இரண்டு அரச வங்கிகளினால் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட கடன்தொகை சுமார் 602 பில்லியன் ரூபாவாகும். அதில் பெரும்பகுதியை திருப்பிச் செலுத்த முடியாததால் அறவிட முடியாக் கடனாக தள்ளுபடி செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்தக் கடன் தொகையை நம் நாட்டில் விவசாயம் மற்றும் தொழில் துறைகளில் பயன்படுத்த முடிந்திருந்தால், அந்தத் துறைகளில் பெரும் வளர்ச்சியை எட்ட முடிந்திருக்கும். நாட்டில் நிதிக் கட்டுப்பாடு இல்லாததால்தான் இத்தகைய நிலை ஏற்பட்டது.

இங்கு வர்த்தகர்களும், நிதி நிறுவனங்களும் நெருக்கடியில் சிக்காத வகையில் செயல்பட வேண்டும். அதன்படி, 'பரேட்டா' சட்டத்தால் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக, நாடாளுமன்றத்தில் சில திருத்தங்களை முன்வைக்க எதிர்பார்க்கிறோம்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு தனியான கடன்திட்டத்தையும் அறிமுகப்படுத்த உள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இதே கருத்தையே கொண்டுள்ளார்.

மேலும், எமக்கு நிதியுதவி வழங்கும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து இந்த குறைந்த வட்டியில் கடன் வழங்கும் முறையை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். வங்கிகள் மூலம் மாத்திரம் கடன் வழங்கும் போது, கடன் பெறத் தகுதியுள்ளவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறதா என்ற பிரச்சினை எழுகிறது. எனவே, அமைச்சரவையுடன் கலந்துரையாடிய பின்னர், இந்த கடன் வசதியை வழங்கும்போது, கண்காணிப்பு முறைமையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்தோம்.

நிதியமைச்சுடன் இது தொடர்பில் கலந்துரையாடவும் நாம் எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## சிறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இரண்டு கூறுகளாக குறித்த வேலைத்திட்டத்திற்கு 20 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதுடன், அதில் 15 பில்லியன் ரூபாய் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மற்றும் புதிய தொழில் முயற்சிகளை வலுப்படுத்துவதற்கும், எஞ்சிய 5 பில்லியன் ரூபாய் செயலற்ற கடன் பிரிவின் கீழ் காணப்படுகின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் ஒதுக்கப்படவுள்ளது.

அதற்கமைய உத்தேச கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




# கர்ப்பிணித்தாய்மார்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வுகள்



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் கர்ப்பிணித்தாய்மார்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிிழமை நடைபெற்றது.

மகப்பேற்று வைத்திய நிபுணர் பி.ஏ.டீ.எல். ரன்சிறியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியதுடன் வைத்தியசாலையின் பணிப்பாளரால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது.

அவர் தனது உரையில் -

எமது வைத்தியசாலை வரலாற்றில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்படுவது இதுவே முதல்தடவையாகும். இந்த செயலமர்வின் நோக்கம் எமது நாட்டிற்கும் சமூகத்திற்கும் சிறந்த குணம், நலம் மற்றும் பலமிக்க ஒரு குழந்தையை பெற்றெடுக்க வேண்டும் எனவும் அவர்களுடைய பங்கானது எதிர்காலத்தில் சிறப்பாக இருக்க வேண்டும்.

வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணரான பி.ஏ.டீ.எல்.ரன்சிறி அவர்களின் இந்த சிறப்பான விழிப்புணர்வு நிகழ்வில் பல்வேறுபட்ட விளக்கங்களும் அறிவுரைகளும் வழங்கப்படுவதை பார்த்து, செவிமடுத்து கர்ப்பிணித்தாய்மாராகிய நீங்களும் பலனடையுமாறும் உங்களுடைய பிரச்சினைகளுக்கும் சந்தேகங்களுக்கும் விளக்கங்கள் அளிக்கப்படும் எனக்கூறினார்.

இந்நிகழ்வில் அதிதியாக கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி என்.ரமேஸ் கலந்து சிறப்பித்திருந்தார்.

தொடர்ந்து மகப்பேற்று வைத்திய நிபுணர் பி.ஏ.டீ.எல்.ரன்சிறியின் விளக்கவுரை செயலமர்வு ஆரம்பமானது.

'பொறுப்புள்ள பெற்றோர்' என்ற தலைப்பில் இந்நிகழ்வு பல சிரமத்திற்கும் தியாகத்திற்கும் மத்தியிலும் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து வளர்த்தெடுப்பதன் பிரதான நோக்கம் என்ன? சமூகத்திற்கு நல்ல பிள்ளையை அளிக்க வேண்டும். ஆகவே அவ்வான பிள்ளையின் இயல்புகள், ஆரோக்கியம், புத்திக்கூர்மை, நற்பண்பு இவற்றையெல்லாம் பிள்ளைக்கு கற்று கொடுக்க மிகவும் உகந்த காலப்பகுதியே இந்த மகப்பேற்று காலம். வயிற்றில் உள்ள பிள்ளையுடன் பெற்றோர் உரையாடுதல், சிறந்த நல்ல புத்தக வாசிப்பு, பொருத்தமான தொலைகாட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன் மூலமும் பிள்ளைக்கு நறபயிற்சியை அளிக்க முடியும்.

வயிற்றில் இருக்கும் மகப்பேற்று காலத்தில் பிள்ளையானது உணரும், கேட்கும், பார்க்கும் மற்றும் உண்ணும் விதத்தை கற்றுக் கொள்ளும். அதற்காக, அம்மாவின் உடல் ஆரோக்கியம் பேண இயற்கை உணவுகளின் முக்கியத்துவமும், தகுந்த உடற் பயிற்சியும் மேலும் மகப்பேற்று நேரத்தில் உடல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம். மேலும் கர்ப்பகாலத்தில் ஏற்படும் பொதுவான பிரச்சினைகளான, வாந்தி, மலச்சிக்கல், வயிறு எரிவு, தசைப் பிடிப்பு, கால் வீக்கம், கால் நாளங்களில் ஏற்படும் வீக்கம் போன்றவை பற்றியும், மருந்துவம் சார்ந்த நோய்கள் பற்றியும், சக்கரை வியாதி மற்றும் உயர் குருதி அமுக்கம் ஏனைய வியாதிகள் பற்றியும், கர்ப்பகாலத்தில் ஏற்படும் இவ்வகை நோய் நிலைமை எவ்வாறு கண்டுபிடிப்பது மற்றும் அவற்றால் ஏற்படக்கூடிய பாரதூரமான விடயங்கள் மேலும் கர்ப்பகாலத்தில் ஏற்படக்கூடிய அவசர மற்றும் ஆபத்தான அறிகுறிகளும் விரைந்து வைத்தியசாலை வரவேண்டிய நிலைமைகள் பற்றியும் கூறப்பட்டது.

கர்ப்பம் தரித்ததில் இருந்து பிள்ளை பிறக்கும் வரை உடலில் ஏற்படும் மாற்றங்களும் பிள்ளைப் பேறு நேரத்தில் வலியைத் தாங்குவதற்கான உபாயங்களும் கற்பிக்கப்பட்டன. தாய்பாலூட்டலின் முக்கியத்துவம் மற்றும் பிள்ளைப்பேறின் பின்னரான கர்ப்பத்தடை உபாயங்களும் விளக்கப்பட்டன.

மிக முக்கியமாக பிள்ளை பிறப்பின் பின்னர் ஏற்படும் மனநோய் பற்றியும் அதைத் தடுக்க கணவர் மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களின் அரவணைப்பு பற்றியும் கர்ப்பகாலத்தில் செய்யக் கூடிய யோகா பயிற்சிகள், மூச்சு பயிற்சிகள் பற்றியும் விளக்கப்பட்டது. வருகைதந்த கர்ப்பிணி தாய்மார்களின் சந்தேகங்களுக்கும் விளக்கமும் அளிக்கப்பட்டது.

மேலும் இந் நிகழ்வில் மருத்துவ அதிகாரிகள், தாதிய பரிபாலகர், தாதிய பரிபாலகி, தாதிய உத்தியோகத்தர்கள், குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்கள் உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். (05)

# யாழில் வாகனம் தீக்கிரையானது





யாழ்ப்பாணம் நகரின் மத்திய பகுதியில் வாகனமொன்று திங்கட்கிழமை தீக்கிரையாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திற்கும் ஸ்ரான்லி வீதிக்கும் இடைப்பட்ட வெற்று காணி ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனமே தீக்கிரையாகியுள்ளது.

வாகனமொன்றில் ஏற்பட்ட மின்கசிவே விபத்துக்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

யாழ். மாநகர சபையின் தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை கட்டுப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# 27 ஆவது விருது வழங்கும் நிகழ்வு



(எம்.ஏ.றமீஸ்)

இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தின் 27 ஆவது வருடாந்த சிறப்பு விருது வழங்கல் விழா மற்றும் வருடாந்த பொதுக் கூட்டம் ஆகியன அக்கரைப்பற்று பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் எம்.பி.போல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது நிர்மாணத் துறையில் திறமை காட்டிய துறைசார் அமைப்புகளின் பிரதிநிதிகள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, நிர்மாணத்துறையின் சிறப்புத் தேர்ச்சி மிக்க வல்லுநர்களின் ஆலோசனை வழிகாட்டல் சொற்பொழிவுகளும் இதன்போது இடம்பெற்றன. இதில் ஹிமா ஆலோசனை மற்றும் நிர்மாணத்துறை நிறுவனத்தின் பணிப்பாளர் ஐ.எல்.ஹில்முடீன் உள்ளிட்டோர் விருது வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது பிரதேச செயலாளர்களான ரி.எம்.எம்.அன்சார், எஸ்.எல்.எம்.ஹனீபா, எம்.ஐ.பிர்னாஸ் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது அரச மற்றும் தனியார் துறை சிறப்பு நிர்மாண செயற்பாடுகள் காணொளி மூலமாகக் காட்சிப் படுத்தப்பட்டதுடன், கலை கலாசார பாரம்பரிய விடயங்களும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# காரைதீவு பிரதேச சபையில் ஜெயசிறிலுக்கு வரவேற்பு

(வி.ரி. சகாதேவராஜா)

உலகத்தமிழ் பல்கலைக்கழகத்தால் அண்மையில் சமூக சேவைக்கான கலாநிதி பட்டம் பெற்ற முன்னாள் பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு திங்கட்கிழமை பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

சபையின் செயலாளர் அருணாசலம் சுந்தரகுமார் தலைமையில் கோலாகலமாக நடைபெற்ற இந்நிகழ்வில் அலுவலக ஊழியர்கள் அனைவரும் சேர்ந்து பாரிய வரவேற்பையும் கௌரவிப்பையும் நடத்தினார்கள்.

சபையில் கலாநிதி பட்டம் பெற்ற ஜெயசிறிலுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னமும் வழங்கி சேவையை வியந்து பாராட்டி பேசினார்கள் .

அவரது சேவைக்கு கிடைத்த அங்கீகாரம் இந்த கலாநிதி பட்டம் என்பதை பலரும் அங்கு உச்சரித்தார்கள். இறுதியில் கலாநிதி ஜெயசிறில் ஏற்புரை வழங்கினார். (05)

காலைக்கதிர் Kalaikkathir





# அல் மினா மும்மொழி பாலர் பாடசாலையின் விடுகை விழா

(அபு அலா) -

புத்தளம் முதளைப்பாழி அல் மினா மும்மொழி பாலர் பாடசாலையின் விடுகை விழா முதளைப்பாழி முஸ்லிம் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளர் இஸட்.ஏ.தௌபீக் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். இவ்விழாவில், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.ரி.எம்.தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான பைசல் மரைக்கார், ரிபாஸ் நசீர், மௌலவி பஸால் சலபி, கவிக்குரல் மனசூர், கவிஞர் முனவ்பர்கான் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், பெற்றோர்கள், இளைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05)

# நாடாளுமன்ற செயலாளர் நாயகம் கலந்த தென்கிழக்குப் பல்கலைக் கழக நிகழ்வு





(கே எ ஹமீட்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, கலை கலாசார பீட அரசியல் விஞ்ஞான துறை இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் நாடாளுமன்றத்துடன் இணைந்து, பல்கலைக்கழக உள்வாரி இளங்கலைப்பட்டதாரி மாணவர்களுக்கான,நாடாளுமன்ற செயற்பாடுகளும் ஒழுங்கு முறைகளும்' பற்றிய குறுங்கால கற்கைநெறியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) தலைமை பீட அரசியல்துறை தலைவர் கலாநிதி எம்.அப்துல் ஜப்பார் அவர்களது தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வரவேற்புரையை கலாநிதி எம்.அப்துல் ஜப்பார் அவர்களும் நிகழ்வுபற்றிய அறிமுக உரையை நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவின் மக்கள் தொடர்பு அதிகாரி யாஸ்ரி முகம்மட் அவர்களும் ஆற்றினர்.

நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவுடன் இணைந்து இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி அனுஷா ரோஹணதீர அவர்கள் கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதிகளாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களும் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

நிகழ்வைத் தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட அரசியல்துறை தலைவர் கலாநிதி எம். அப்துல் ஜப்பார் மற்றும் நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவின் மக்கள் தொடர்பு அதிகாரி யாஸ்ரி முகம்மட் ஆகியோரின் கூட்டு நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளுக்கு அனுசரணையை யுஎஸ்எயிட் மற்றும் தேசிய ஜனநாயக நிறுவனம் என்பன வழங்கியிருந்தன.

இங்கு அதிதிகளுக்கு பிரதம அதிதிக்கும் வளவாளர்களுக்கும் உபவேந்தர் உள்ளிட்ட அணியினர் ஞாபக சின்னங்களை வழங்கிவைத்தனர்.

கற்கை நெறியை பூர்த்திசெய்த 246 மாணவர்கள் இன் நிகழ்வின்போது தங்களுக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட அதேவேளை நிகழ்வுகளுக்கு ஒத்துழைத்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றி தெரிவித்து விரிவுரையாளர் ரீ .எப். சாஜிதா உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி அனுஷா ரோஹனதீரக்கு உபவேந்தரால் நினைவு சின்னம் வழங்கப்பட்டது.(05)

# விவாகரத்துச் சட்ட மறுசீரமைப்பு செயலமர்வு மார்ச் 2 தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில்

(பாறுக் ஷிஹான்)



நமது நாட்டின் அரசியல் யாப்பின் பன்முகத்தன்மைக்கமைவாக விவாக, விவாகரத்து சட்டம் 1951 முதல் அமுலில் இருந்து வருகின்றது. எனினும், தற்பொழுது இச்சட்டத்தின் மறுசீரமைப்பு தொடர்பாக நமக்குள்ளும் வெளியிலும் பல்வேறுபட்ட கருத்தாடல்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

முரண்பாடான பார்வை இத்தரப்புக்களிடையே காணப்படுவதால் இவ்விடயத்தில் கருத்தொற்றுமையினை உருவாக்கும் அடிப்படையில், இந்நாட்டில் இஸ்லாமிய சட்டவியல் கற்கை நெறியினை விஷேட கற்கை நெறியாக பல்கலைக்கழக மட்டத்தில் போதிக்கின்ற அரச நிறுவனமாகத் திகழும் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழி பீடம், முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான புலமைசார் செயலமர்வொன்றினை நடாத்த ஏற்பாடுசெய்துள்ளது.

மேற்படி நிகழ்வானது, 02 மார்ச் 2024 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழி பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் அவர்களின் நெறிப்படுத்தலில் நடைபெறும் இச்செயலமர்வுக்கு குறிப்பிட்ட துறைசார் நிபுணர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் ஆர்வலர்கள் என பலரும் அழைக்கப்படவுள்ளனர் என இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீட பீடாதிபதி அஷ்ஷேய்க். எம்.எச்.ஏ. முனாஸ் தெரிவித்துள்ளார். (05)

# இந்தியாவிலிருந்து திரும்பியோருக்கான கைத்தொழிலுக்கான உபகரணங்கள்



(மூதூர் நிருபர்-)

நிலைபேறான மீள்குடியேற்றத்திற்கும் மீள் ஒருங்கிணைப்புக்குமான விரிவான ஆதரவு எனும் செயற்றிட்டத்தின் கீழ் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து மீள் குடியமர்ந்த, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவைச்சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதற்காக திறம்பட தமது தொழில்களை மேற்கொண்டுவரும் பயனாளிகளுக்கு இரண்டாம் கட்ட உதவியின் கீழ் அதற்கான உபகரணங்கள் இலவசமாக மூதூர் பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் உரிய பயனாளிகளிடம் இதனை கையளித்தார்.

என் டிபியின் அனுசரணையுடன் ஒபர் நிறுவனத்தின் மூலம் இவை பெற்றுக்கொடுக்கப் பட்டுள்ளன. (05)

# அரச ஊழியர் போன்று நடித்து கந்தளாயில் பண மோசடி





(எப்.முபாரக்)

கந்தளாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பல பகுதிகளில் அரச உத்தியோகத்தர் என்று தன்னை கூறி நூதன முறையில் அறிமுகப்படுத்தி வயோதிபர்களிடம் அஸ்வெஸ்சும திட்டத்தில் தங்களின் பெயர் வந்துள்ளது என்று கூறி பணம் மோசடியில் ஈடுபட்டுள்ளது அம்பலமாகியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர் கந்தளாய் ஆரியவங்ச மாவத்தை வாத்தியகம வட்டுக்கச்சி மற்றும் லைவ்வீதி போன்ற பகுதிகளில் தன் கைவரிசையை காட்டி உள்ளார் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர் .

தங்களுக்கு அஸ்வெஸ்சும திட்டத்தில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறி இப்பகுதிகளில் நான்காயிரம் மற்றும் ஐந்தாயிரம் ரூபா பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் நடமாடியமை தொடர்பாக அப்பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி போன்றவற்றில் பதிவாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் கந்தளாய் பொலிஸார் தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை மாநகர சபை பதில் கணக்காளராக ஹபீபுல்லாஹ் கடமைகளை திங்கள் ஏற்றார்






(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபையின் பதில் கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ள வை. ஹபீபுல்லாஹ் திங்கட்கிழமை மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி முன்னிலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி உட்பட பிரிவுத் தலைவர்களும் உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது மாநகர ஆணையாளர் தலைமையில் உத்தியோகத்தர்கள் அனைவரும் பதில் கணக்காளரை வரவேற்று வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

கல்முனை வலயக் கல்விப் பணிமனையின் கணக்காளராக கடமையாற்றி வருகின்ற ஹபீபுல்லாஹ், அதற்கு மேலதிகமாக கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரால் கல்முனை மாநகர சபையின் பதில் கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தாக்கப்பட்டு காயமடைந்த பெண் சாவு புத்தளத்தை சேர்ந்த கணவன் கைது

உடலில் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த இரு பிளளைகளின் தாயாரான பெண் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

கணவரின் தாக்குதலுக்கு இலக்காகியே அவர் காயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் புத்தளம், நுரைச்சோலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தனது பாட்டியின் வீட்டில் தங்கியிருந்த போது குறித்த வீட்டிற்கு வந்த கணவர் மனைவியை தடியால் தாக்கினார் என்றும் காயமடைந்த மனைவி வைத்தியசாலைக்கு செல்லவிடாமல் தகராறு செய்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் காயமடைந்தவர் உறவினர் ஒருவரின் உதவியுடன் முச்சக்கரவண்டியில் அழைத்துச் செல்லப்பட்டு புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று அதிகாலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேகநபரான கணவர் புத்தளம் பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

# இரு மாதங்களில் மட்டும் நாட்டில் 83 கொலைகள்

இந்த வருடத்தின் இரு மாத காலப்பகுதிக்குள் மட்டும் 83 கொலைகள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கையில் இவ்வருடம் இரு மாத காலப் பகுதிக்குள் 83 கொலை சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 1,180 திருட்டு சம்பவங்களும் 310 கொள்ளைச் சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் இரு மாத காலப்பகுதிக்குள் 20 துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அவற்றில் 10 துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் பாதாள உலக குற்றவாளிகள் ஈடுபட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் தற்போது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# மாதகல் விகாரைக்கு அருகே மீன்பிடிக்க மீண்டும் தடை

யாழ்ப்பாணம் - மாதகல் சம்பில்துறை (ஜம்புகோள பட்டினம்) விகாரைக்கு அருகில் உள்ள கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என கடற்படையினர் தடை விதித்துள்ளதாக அப்பகுதி கடற்தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சம்பில்துறை பகுதியில் அமைந்துள்ள சங்கமித்த விகாரையின் பின்புறமாக உள்ள கடற்பகுதிகளில் மீன் பிடியில் ஈடுபடவேண்டாம் என கடந்த 2013ஆம் ஆண்டு கடற்தொழிலாளர்களுக்கு கடற்படையினர் தடை விதித்திருந்தனர். அது குறித்து அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டதை அடுத்து தடை விலக்கப்பட்டு மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது மீண்டும் மீன்பிடிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அப்பகுதிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள கடற்படை அதிகாரி, விகாரையின் பின் பகுதிகளில் மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவித்துள்ளார். அத்துடன் அப்பகுதிக்கு அருகில் கடற்தொழிலாளர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டால் கடற்படையினர் அவர்களை அவ்விடத்தில் இருந்து துரத்தி வருகின்றனர் எனவும் மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

# புதிதாக தெரிவுசெய்யப்பட்ட 20 சமாதான நீதிவான்களுக்கு நியமனங்கள் வழங்கல்

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் அவர்களின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்திருந்த நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஸவால் தெரிவு செய்யப்பட்ட 20 புதிய சமாதான நீதிவான் பதவி நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வருடத்தில் இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தனின் பரிந்துரையின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 17 பேருக்கு சமாதான நீதவான் பதவி நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ள நிலையில், நேற்றைய தினம் மேலும் 20 பேருக்கான சமாதான நீதவான் பதவி நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தனின் பிராந்திய காரியாலயத்தில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் நீதி இராஜாங்க அமைச்சர் அநுராதா ஜெயரத்தின, நீதியமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகள், கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

# சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளராக சர்தார் மிர்ஸா

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கைக் கணக்காளர் சேவையைச் சேர்ந்த எஸ்.எல் சர்தார் மிர்ஸா நேற்று (செவ்வாய்க்கிழமை) சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளராக கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் டி.எம்.எம். அன்சார், இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம் ரஸ்ஸான் (நளீமி), சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் ராஸீட் யஹியா, சம்மாந்துறை பிரதேச செயலக முன்னாள் கணக்காளர் ஐ.எம் பாரீஸ், அக்கரைப்பற்று பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம் தமீம், அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய கணக்காளர் ஏ.கே அஸ்கர், சிரேஸ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல் ஆசீர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இவர் அக்கரைப்பற்று, தமன, காரைதீவு, அட்டாளைச்சேனை, இறக்காமம் போன்ற பிரதேச செயலகங்களில் கணக்காளராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# மூதூர் பிரதேச செயலக கலாசாரப் பெரு விழா

(மூதூர் நிருபர்)

மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக உள்வாங்கலை உறுதிப்படுத்துவோம் எனும் தொனிப்பொருளில் விழுதின் இளையோர்களும் மூதூர் பிரதேச செயலகமும் ஒன்றிணைந்து நடத்தும் கலாசார நிகழ்வு மூதூர் கலாசார மண்டபத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை நடைபெற்றது.

இதில் மூதூர் கிண்ணியா தம்பலகாமம், பட்டினமும் சூழலும் ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி இளையோர்கள் கலந்துகொண்டிருந்தனர். இதில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர்கள் விழுதுனுடைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (05)

# சிப்பாயின் சாவு தொடர்பில் 4 இராணுவத்தினர் கைது

ஹொரணை தொம்கொட இராணுவ முகாமைச் சேர்ந்த 4 படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். சக இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பான சந்தேகத்தின் பேரில் இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ முகாமில் உள்ள குளத்தில் தரிந்து லக்ஷான் (வயது 24) என்ற சிப்பாயின் சடலம் ஜனவரி 27 அன்று மீட்கப்பட்டது. அவரது உயிரிழப்பு மர்மமாக இருந்த நிலையில், அந்தச் சாவு தொடர்பில் அதே முகாமிலே விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றும் நான்கு படையினர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று அங்குருவத்தோட்ட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இராணுவச் சிப்பாய் உயிரிழந்த தகவலை மறைத்தமை, நீதிவானின் விசாரணையில் அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள் முரணாக இருந்தமை மற்றும் உண்மையை பொலிஸாரிடம் தெரிவிக்காமல் மறைத்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழேயே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# தூக்கத்தில் தாக்கப்பட்டு காயமடைந்தவர் சாவு

வீட்டில் உறங்கிகொண்டிருந்தவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நடராசா ரவிக்குமார் (வயது 44) என்பவரே உயிரிழந்தார்.

தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த வேளை பெப்ரவரி 20 அவரது முகம் மற்றும் தலை பகுதிகளில் அடையாளம் தெரியாதவர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர். படுகாயமடைந்த அவரை உறவினர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனின்றி அங்கு உயிரிழந்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.02.2024இல் வெளியிடப்பெற்றது.